

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 361 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆடி 25 – வியாழக்கிழமை 10 ஆகஸ்ட் 2023 – கோவை ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 361 : Thiruvalluvar Year - 2054 - Aadi 25 - Thursday 10 August 2023 - Kovai ★★ 16 Pages ₹ 5.00

## டெல்லியை ஒரு மாநகராட்சியைப் போல தரம் குறைப்பதா?

# மாநிலங்களவையில் மசோதா நிறைவேறிய நாள் ‘மக்களாட்சியின் கறுப்பு நாள்!’





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (8.08.2023) தலைமைச் செயலகத்தில், ஹுண்டாய் மோட்டார் குழும நிறுவனத்தின் செயல் தலைவர் யூசன் சுங் (Mr. Euisun Chung) சந்தித்து, தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் தொழில் முதலீடுகள் குறித்துப் பேசினார். இச்சந்திப்பின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ச.கிருஷ்ணன், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் வே.விஷ்ணு, ஹுண்டாய் மோட்டார் குழும நிறுவனத்தின் தலைவர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் ஜேஹுன் சினாங் (Mr. Jaehoon Chnag), தலைவர் மற்றும் முதன்மை தொழில்நுட்ப அலுவலர் யோங்வா கிம் (Mr. Yonghwa Kim), ஹுண்டாய் மோட்டார் இந்தியா நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் உன்சூ கிம் (Mr. Unsoo Kim), செயல் இயக்குநர் (பெருநிறுவன விவகாரங்கள்) டோசிக் கிம் (Mr. Dosik Kim) மற்றும் ஹுண்டாய் நிறுவன தலைமை நிர்வாகிகள், அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

**சென்னை, ஆக. 10 - டெல்லியை ஒரு மாநகராட்சியைப் போல தரம் குறைக்கும் வகையில் மசோதாவை மாநிலங்களவையில் நிறைவேற்றிய நாள் - “மக்களாட்சியின் கறுப்பு நாள்” என்று கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து நேற்று முன்தினம் (8.8.2023), திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

தலைநகர் டெல்லியை ஒரு மாநகராட்சியைப் போலத் தரம் குறைக்கும் DelhiServicesBill மாநிலங்களவையில் நிறைவேறிய நேற்றைய நாள், மக்களாட்சியின் கறுப்பு நாள்!

எதிர்க்கட்சி ஆட்சி செய்தால் அந்த மாநிலத்தைக் கூடச் சிதைப்போம் என்ற பா.ஜ.க.வின் பாசிசம் அரங்கேறிய நாளை வேறு என்ன சொல்வது?

29 வாக்குகள் வித்தியாசத்தில் ஒரு நாட்டின் தலைநகரையே தரைமட்டத்துக்குக் குறைத்த சதிச் செயலுக்கான தண்டனையை டெல்லி மாநில மக்கள் மட்டுமல்ல, ஒட்டுமொத்த இந்திய மக்களும் விரைவில் தருவார்கள்!

மூன்று மாதமாக Manipur எரிகிறது. அதை அணைக்க முடியாமல், டெல்லியைச் சிதைக்கத் துடிக்கும் பா.ஜ.க.வின் தந்திரங்களை மக்கள் நன்கு உணர்ந்துள்ளார்கள்.

**29 வாக்குகள் வித்தியாசத்தில் ஒரு நாட்டின் தலைநகரையே தரைமட்டத்துக்குக் குறைத்த சதிச் செயலுக்கான தண்டனையை டெல்லி மாநில மக்கள் மட்டுமல்ல, ஒட்டு மொத்த இந்திய மக்களும் விரைவில் தருவார்கள்! மூன்று மாதமாக மணிப்பூர் எரிகிறது. அதை அணைக்க முடியாமல், டெல்லியைச் சிதைக்கத் துடிக்கும் பா.ஜ.க.வின் தந்திரங்களை மக்கள் நன்கு உணர்ந்துள்ளார்கள்.**

மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் மாநில முதலமைச்சரின் அதிகாரத்தைக் குலைக்கும் இந்த மசோதாவை, பேரறிஞர் அண்ணாவின் பெயரால் கட்சி நடத்தும் அடிமைக் கூட்டம் ஆதரித்து மாநிலங்களவையில் வாக்களித்திருப்பது எனக்கு அதிர்ச்சியளிக்கவில்லை.

“நான் யாருக்கும் அடிமையில்லை” என்றபடியே, பா.ஜ.க.வின் பாதம் தாங்கி, “கொத்தடிமையாக” தரையில் ஊர்ந்து கொண்டிருக்கிறார் பழனிசாமி என்பதையே இது வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

## 9 ஆண்டு கால பா.ஜ.க. அரசு தோல்விகளைத்தான் சந்தித்துள்ளது! மக்களிடம் அளித்த

# வாக்குறுதிகள் எதையும் மோடி அரசு நிறைவேற்றவில்லை!

## பிரதமர் மோடி அரசு மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் நாடாளுமன்றத்தில் மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு அடுக்கடுக்கான குற்றச்சாட்டு!

**புதுடெல்லி, ஆக. 10 - மோடி அரசு மீது “இந்தியா” கூட்டணிக் கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் நேற்று முன்தினம் (8.8.2023) மக்களவையில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இரண்டு நாட்கள் நடைபெற உள்ள விவாதத்தில் முதல் நாளான நேற்று முன்தினம் தி.மு.க. சார்பில் கழக நாடாளுமன்றக் குழுவின் தலைவர் டி.ஆர்.பாலு கலந்து கொண்டு உரையாற்றினார். ஒன்பது ஆண்டு கால ஒன்றியப் பிரதமர் மோடி தலைமையிலான அரசின் தோல்விகளையும், அவர் தேர்தல் காலங்களில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாததையும் பட்டியலிட்டுக் காட்டியதுடன் தமிழ்நாட்டு திட்டங்கள் எதையும் மோடி அரசு நிறைவேற்றவில்லை என்று டி.ஆர்.பாலு தனது உரையில் கடுமையான குற்றச்சாட்டுகளை முன்வைத்தார்.**

*அவரது பேச்சின் முழு விவரம் வருமாறு: -*

**அர்ஜூனனைப் போலவே நாங்களும் தீமைகளை அழிப்போம்!**

எனக்கு முன்பு பேசிய பா.ஜ.க. உறுப்பினர் மகாபாரதக் கதையைக் குறிப்பிட்டார். அது புராணக் கதை. இருப்பினும், அந்தக் கதையில் போர்க் களத்தில் கிருஷ்ணன், அர்ஜூனனைப் பார்த்து தயவு தாட்சண்யம் இல்லாமல், எதிரிகளான உறவினர்கள் நண்பர்கள் மேல் கணைகளைத் தொடுக்கச் சொன்னார். அதன்படியே அர்ஜுனனும் செய்தார். அதைப்போலவே நானும் இப்போது எதிர்வரிசையான ஆளும் கட்சியில் உள்ள பழைய நண்பர்கள் என்பதைத் தாண்டி அவர்கள் நாட்டுக்கு இழைத்து வரும் தீங்குகளுக்கு எதிராக தாக்குதல் தொடுக்க போகிறேன்.

ஒரு அரசின் மீதான ‘நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தில்’ பேசுவது மகிழ்ச்சியான ஒன்றல்ல. அதிலும் முழுப் பெரும்பான்மையுடன் உள்ள ஒரு அரசின் மீது, அதுவும் அந்த அரசு தனது இறுதிக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் நிலையில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்து பேசுவது என்பதும் வருத்தம் தரக் கூடியதுதான். இருப்பினும், இன்றைய நிலையில் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஆதரித்தும் அரசை கண்டித்தும் பேசுவது எனது கடமையாகும்.

**மதுரை எய்ம்ஸ் திட்டத்திற்கு நிதி கொடுக்காதது ஏன்?**

சென்ற 2019ஆம் ஆண்டில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும் முன்னர் மதுரை யில் ஒன்றிய அரசு சார்பாக எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை அமைக்க பிரதமர் நரேந்திர மோடி அடிக்கல் நாட்டினார். இன்றுவரை அந்த மதுரை எய்ம்ஸ் கட்டி அமைக்கப்படவில்லை. எனக்கு முன்னால் பேசிய பா.ஜ.க. உறுப்பினர் நிஷிகாந்த் துபே அவர்கள் ஜார்கண்ட்



மாநிலத்தில் உள்ள அவரது தொகுதியில் பல்வேறு திட்டங்களை பிரதமர் அளித்துள்ளார் என்று கூறி பெருமைப்பட்டார். ஆனால், பிரதமர் மோடி எங்கள் தமிழ்நாட்டுக்கு எதுவும் செய்யவில்லை என்பதுதான் என் குற்றச்சாட்டு. மதுரை எய்ம்ஸ் திட்டத்துக்கு அடிக்கல் நாட்டினாரே தவிர, ஐந்து ஆண்டுகளாக திட்டப் பணிகள் எதுவும் நடைபெறவில்லை. கேட்டால் ஜப்பான் அரசின் நிதி உதவி இன்னும் வந்து சேரவில்லை என்று அரசு தரப்பில் சொல்கிறார்கள். 50 லட்சம் கோடி ரூபாய் கொண்ட ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையான பட்ஜெட்டில் மதுரை எய்ம்ஸ் திட்டத்துக்கு வெறும் 2000 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்ய முடியாதா என்ன?

## மதுரை எய்ம்ஸ் - சேது சமுத்திரத் திட்டம் உள்ளிட்ட தமிழ்நாட்டுத் திட்டங்கள் அனைத்தும் புறக்கணிப்பு!

**கிடப்பில் சேது சமுத்திரத் திட்டம்!**

அதைப்போலவே தமிழ்நாடு மக்களின் 160 ஆண்டு கனவுத் திட்டத்தையும் அலமாரியில் வைத்து கிடப்பில் போட்டு பூட்டி விட்டீர்கள்? ஏன்? இந்தத் திட்டத்தை, அன்றைய பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவர் திருமதி சோனியாகாந்தி மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் 2005ஆம் ஆண்டில் சிறப்பான விழாவில் மதுரை மாநகரில் துவக்கி வைத்தார்கள் என்பதால் தானா? அந்தக் காரணத்தினால்தான் சங்பரிவாரம் இந்த அரிய திட்டத்தை முடக்கி வைத்துள்ளது. சேது கப்பல் கால்வாய் திட்டம் சிறப்பாக நிறைவேற்றப்பட்டு வந்ததை உலகமே பார்த்து வியந்ததே. இன்னும் முப்பது கிலோமீட்டர் தொலைவில்தான் கால்வாய் பணிகள் எஞ்சி இருந்த நிலையில் திடீரென திட்டம் முடக்கப்பட்டது. இன்னும் ஒரு சில மாதங்கள் கூடுதலாக மட்டும் கிடைத்திருந்தால் சேதுசமுத்திரத் திட்டம் நிறைவேறி இருக்கும். ஆனால், நீங்கள் அந்த திட்டப் பணிகளைத் தொடர ஒன்பது ஆண்டுகளில் எதையும் செய்யவில்லை.

அதைப்போலவே, கச்சத்தீவை மீட்டு இந்தியாவுக்கு திரும்பக் கொண்டு வருவது குறித்தும் நீங்கள் எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

*ஒரு அரசின் மீதான ‘நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தில்’ பேசுவது மகிழ்ச்சியான ஒன்றல்ல. அதிலும் முழுப் பெரும்பான்மையுடன் உள்ள ஒரு அரசின் மீது, அதுவும் அந்த அரசு தனது இறுதிக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் நிலையில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்து பேசுவது என்பதும் வருத்தம் தரக் கூடியதுதான். இருப்பினும், இன்றைய நிலையில் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஆதரித்தும் அரசை கண்டித்தும் பேசுவது எனது கடமையாகும்.*

**15 லட்சம் ரூபாய் வாக்குறுதி எங்கே? 2 கோடி வேலை எங்கே?**

ஆண்டுக்கு இரண்டு கோடி பேருக்கு புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கித் தருவதாக பிரதமர் மோடி அவர்கள் 2014ல் தனது தேர்தல் பரப்புரையில் வாக்குறுதி தந்தார். அதன்படி சென்ற 9 ஆண்டுகால உங்கள் ஆட்சிக்காலத்தில் 18 கோடி பேருக்கு வேலை கிடைத்திருக்க வேண்டுமே. ஆனால், அப்படி நடந்ததா என்ன?

தொடர்ச்சி 4ஆம் பக்கம்